**சுருக்கம்**

வேளாண்மை - உழவர் நலத் துறை – 2022–2023 – ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கை - மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்பு - "தமிழ் மண்வளம்" என்ற தனி இணைய முகப்பு (Portal) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து உருவாக்கப்படும் என்ற அறிவிப்பினை செயல்படுத்துதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மை - உழவர் நலத் (வே.உ_2) துறை**

திருவள்ளுவர் ஆண்டு 2053, சுபகிருது, வைகாசி மாதம் 17-ம் நாள்

**அரசாணை (டி) எண்.130** **நாள்.31.05.2022**

படிக்கப்பட்டது:

வேளாண்மை இயக்குநரின் கடித எண். ஆகூபி2/ 26233 / 2022, நாள் 05.05.2022.

---------

**ஆணை:**

மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தமிழக சட்டமன்றப் பேரவையில், கடந்த 19.03.2022 அன்று தாக்கல் செய்த 2022-23-ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் பல்வேறு அறிவிப்புகளில் பின்வரும் அறிவிப்பும் வெளியிடப்பட்டுள்ளது.

அறிவிப்பு பத்தி 11 (V):

> " உழவனின் உள்ளத்திலே புயல் இருக்குமானால் வயலிலே வளம் காண முடியாது" என்றார் பேரறிஞர் அண்ணா, அப்பெருந்தகையின் எண்ணத்திற்கு வண்ணம் தரும் வகையில் உழவனின் உள்ளத்தில் உள்ள ஏக்கத்தினைப் போக்கும் நோக்கோடு "தமிழ் மண்வளம்" என்ற தனி இணைய முகப்பு (Portal) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து உருவாக்கப்படும். இதனால், விவசாயிகளின் நிலங்களின் புலஎண் வாரியாக மண்வளத்தினைத் தெரிந்துகொள்ள முடியும். மேலும் மண்வளப் பரிந்துரை அட்டையினையும் தாங்களே அச்சிட்டு கொள்ள முடியும். இதன் மூலம் மண்வளத்திற்கேற்ற

வேளாண், தோட்டக்கலை, மரப்பயிர்கள் பரிந்துரை செய்யப்படும்".

2. மேற்படி அறிவிப்பு தொடர்பாக, வேளாண்மை இயக்குநர், தமிழ் இலக்கியங்களில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து வகையாக நிலங்கள் பிரிக்கப்பட்டு பயிர் மேலாண்மை செய்யப்பட்டன. குறிஞ்சி நிலமும், முல்லை நிலமும் மழை இல்லாமல் காய்ந்து போன நிலமே பாலை நிலமாக திரிபடையும் என்றும் எனினும் தற்போது அறிவியல்பூர்வமாக தமிழ்நாட்டில் நிலங்கள் பின்வரும் ஏழு மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளன என முன்மொழிந்து, பின்வரும் தனது கருத்துருவினை அரசுக்கு அனுப்பியுள்ளார்.

தமிழகத்தில் நிலவும் கால நிலை, மழையளவு மற்றும் இதர பௌதீக மற்றும் சூழலியல் பண்புகளுக்கு ஏற்ப மாவட்டங்கள் அனைத்தும் ஏழு வேளாண் மண்டலங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவை முறையே:-

1. **வட கிழக்கு மண்டலம்:** இம்மண்டலத்தில் காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், செங்கல்பட்டு, ராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருவண்ணாமலை, கடலூர் (சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் மற்றும் புவனகிரி வட்டங்கள் நீங்கலாக), விழுப்புரம், கள்ளக்குறிச்சி மாவட்டங்களை உள்ளடக்கியது. இங்குள்ள காலநிலையானது பாதி வறண்ட வெப்பமண்டலமாகும்.
2. **வட மேற்கு மண்டலம்**: இம்மண்டலத்தில் சேலம் , நாமக்கல் (திருச்செங்கோடு வட்டம் தவிர்த்து) தர்மபுரி (மலை பிரதேசங்கள் தவிர்த்து) மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள்
3. **மேற்கு மண்டலம்:** இம்மண்டலத்தில் கோயம்புத்தூர், ஈரோடு மாவட்டங்கள், நாமக்கல் மாவட்டம் (திருச்செங்கோடு வட்டம்), கரூர் மாவட்டம் (குளித்தலை மற்றும் கிருஷ்ணராயபுரம் வட்டங்கள் தவிர்த்து) திண்டுக்கல் (திண்டுக்கல் மற்றும் நத்தம் வட்டம் தவிர) தேனி, பெரம்பலூர், அரியலூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்கள்.
4. **காவேரி டெல்டா மண்டலம்:** தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருச்சி மற்றும் திருவாரூர் மாவட்டங்கள், கரூர் மாவட்டம் (குளித்தலை, கிருஷ்ணராயபுரம் வட்டங்கள்), புதுக்கோட்டை மாவட்டம் (அறந்தாங்கி, ஆவுடையார்கோயில், மணமேல்குடி வட்டங்கள்), கடலூர் மாவட்டம் (சிதம்பரம், காட்டுமன்னார்கோவில்,புவனகிரி வட்டம்).
5. **தெற்கு மண்டலம்:** இது மிகப் பெரிய மண்டலமாகும். புதுக்கோட்டை மாவட்டம் (அறந்தாங்கி, ஆவுடையார்கோயில், மணமேல்குடி வட்டம்

தவிர) மதுரை, திண்டுக்கல் மாவட்டம் (திண்டுக்கல் மற்றும் நத்தம் வட்டம்), மதுரை, இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மாவட்டங்கள்.

6. **அதிக மழை பொழிவு மண்டலங்கள் :** கன்னியாகுமரி மாவட்டம்.
7. **மலைப்பிரதேங்கள்:** நீலகிரி, சேர்வராயன்மலை, கொல்லிமலை, பச்சமலை, ஏலகிரி- ஜவ்வாது மலை, ஆனைமலை மற்றும் பொதிகை மலை .

3. ஒவ்வொரு மண்டலத்திலும் களிமண், சிவப்புக் களிமண், வண்டல்மண், கருப்புமண் போன்ற மண்வகைகள் காணப்படுகின்றன. இவற்றின் மூலம் பல்வேறு வகையான பயிர் வகைகள் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன.

4. மேற்கண்டவாறு சராசரி ஆண்டு மழையளவு, முக்கிய மண்வகை, பிரச்சனைக்குரிய மண்வகைகளின் அடிப்படையில் ஒவ்வொரு மண்டலமும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவை கருமண் (கரிசல்மண்), செம்மண், வண்டல்மண் மற்றும் செஞ்சரளை மண்ணாகும். தற்போதைய சூழ்நிலையில், அதிக அளவிலான அடர்சாகுபடி முறைகளாலும், உயர்விளைச்சல் இரகங்களின் பயன்பாட்டினாலும், முறையற்ற உரப்பயன்பாடு மற்றும் போதுமான அளவு அங்கக உரங்களை பயன்படுத்தாத சூழ்நிலையாலும், மண்ணிலுள்ள அங்ககச்சத்துக்கள் குறைந்து வருகின்றன. 1971-ஆம் ஆண்டில் சராசரியாக 1.20 சதவீதமாக இருந்த அங்ககக்கரிமம், 2021-ஆம் ஆண்டில் 0.35 சதவீதமாக குறைந்துள்ளது. மேலும் பிரச்சனைக்குரிய நிலப்பரப்பும் அதிகரித்து காணப்படுகிறது. அமிலநிலங்கள், களர், உவர்நிலங்கள் போன்ற பிரச்சனைக்குரிய நிலப்பரப்பும் அதிகரித்துவரும் சூழ்நிலையில் பரிந்துரைக்கப்பட்ட அளவுகளில், பயிருக்குத் தேவையான தொழுஉரம், பசுந்தாள்உரம், பசுந்தழைஉரம் ஆகியவற்றை இடுதல் அவசியமாகிறது.

5. மேற்காணும் உற்பத்திக்காரணிகள் குறைவதைத் தொடர்ந்து, அதனை கண்காணித்து, உரிய மாற்று நடவடிக்கைகளான மண்ணிற்கு உகந்த பயிர்களைச் சாகுபடி செய்வதன் மூலமே உழவரின் வருமானம் உயரும். இதனைச் செயல்படுத்திட நிறைவுற்ற திட்டங்களில் சேகரிக்கப்பட்ட மண் பரிசோதனைத் தகவல்கள், தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களின் சேகரிக்கப்படும் மண் பரிசோதனைத் தகவல்கள் மற்றும் தரவுகள் ஆகியன அனைத்தும்

ஒற்றை செயலியின் மூலம் ஒருங்கிணைக்கப்படும். இதன் மூலம் விவசாயிகள் தங்களது நிலங்களின் புலஎண் வாரியாக மண்வளத்தினை தெரிந்து கொள்வதுடன், மண்வளப் பரிந்துரை அட்டையினையும் தாங்களே அச்சிட்டுக் கொள்ள முடியும். இதனால், உரிய வேளாண், தோட்டக்கலை மற்றும் மரவகைப் பயிர்ப் பரிந்துரைகளையும் விவசாயிகள் பெற்றுக்கொள்ள இயலும்.

➢ **திட்டத்தில் பங்கு பெறும் துறைகள்**

1. வேளாண்மைத் துறை
2. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை
3. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

**ஒருங்கிணைக்கப்படும் திட்டங்கள்**

1. தேசிய நீடித்த நிலையான தேசிய வேளாண் இயக்கம் (மண்வள அட்டை) - சுழற்சி (1) மற்றும் சுழற்சி (2)
2. கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்
3. நுண்ணீர்ப்பாசனம்
4. தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம்
5. தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம்.

6. வேளாண்மை - உழவர் நலத்துறையின் 2022-2023 - ஆம் வேளாண் நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட்ட இவ்வறிவிப்புகள் தொடர்பான வேளாண்மை இயக்குநரின் கருத்துருவினை கவனமுடன் ஆய்வு செய்து, மேலே பத்தி 5- இல் உள்ள வேளாண்மை இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, இணைப்பில் கண்டுள்ள இத்திட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றிடும் வகையிலும், திட்டச் செயலாக்கம், திட்ட கண்காணிப்பு மற்றும் திட்டப் பயன்களை எய்திடும் வகையில் "தமிழ் மண்வளம்" என்ற தனி இணைய முகப்பு தொடர்பான திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு வேளாண்மை இயக்குநருக்கு நிர்வாக அனுமதியினை வழங்கி, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

**ஆளுநரின் ஆணைப்படி)**

**சி. சமயமூர்த்தி**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசுச் செயலாளர்**

**பெறுநர்**

வேளாண்மை இயக்குநர், சென்னை-5

இயக்குநர்,தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை,
சென்னை-5.

கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையர், சர்க்கரைத்
துறை, சென்னை-35

இயக்குநர்,வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்
துறை, சென்னை-32.

தலைமைப் பொறியாளர் (வேளாண்மை பொறியியல்),
சென்னை -35.

செயல் இயக்குநர், தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு
முகமை, சென்னை-32.

பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்-3.

இயக்குநர், விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்று துறை,
கோயம்புத்தூர்-13.

நகல்

மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.

வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர்
அவர்களின் முதுநிலை தனிச் செயலர், சென்னை-9.

உதவி நிரலர், வேளாண்மை- உழவர் நலத் துறை, சென்னை-9.

உதிரி/இருப்புக் கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

31/5/2022
பிரிவு அலுவலர்

31/5/22

## இணைப்பு

**(அரசாணை (டி) எண்.130, வேளாண்மை (ம) உழவர் நலத் (வே.உ2) துறை நாள்.31.05.2022)**

வேளாண்மைத்துறையின் கீழ் இயங்கும் மண் பரிசோதனை நிலையங்களில் மண்மாதிரிகள் ஆய்வுசெய்யப்பட்டு, தொகுக்கப்பட்டுள்ள புலஎண்வாரியான தகவல்கள் மற்றும் தரவுகள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப ஆலோசனையுடன், விவசாயிகளுக்கு உரிய பரிந்துரை வழங்கும் விதத்தில் இணையத்தில் பதிவேற்றம் செய்ய வழிவகைசெய்யப்படும்.

- **திட்டக் கண்காணிப்பு:**

திட்டங்களின் கூறுகள் முறையாக ஒருங்கிணைக்கப்பட்டு, செயல்படுத்தப்படுவதைக் கண்காணிக்க, மாநில அளவிலான தொழில் நுட்பக்குழு கீழ்க்கண்டவாறு அமைக்கப்படும்:-

| வ.எண். | தொழில்நுட்பக்குழு உறுப்பினர்கள் |
|---|---|
| 1 | இயக்குநர், ஸ்டாமின் குடுமியான்மலை, புதுக்கோட்டை. |
| 2 | வேளாண்மை கூடுதல் இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை |
| 3 | வேளாண்மை கூடுதல் இயக்குநர், (IAMWARM), வேளாண்மை இயக்குநரகம். |
| 4 | வேளாண்மை கூடுதல் இயக்குநர், (ஆராய்ச்சி) வேளாண்மை இயக்குநரகம். |
| 5 | திரு. அழகு நாகேந்திரன், வேளாண்மை இணை இயக்குநர், தேனி. |
| 6 | டாக்டர். எஸ். பழனிவேலன், பேராசிரியர், புவியியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப வல்லுநர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர்-3 |
| 7 | திரு. எஸ். வெங்கடாச்சலம், வேளாண்மைத் துணை இயக்குநர், விதை ஆய்வு மையம், கோயம்புத்தூர்-13 |
| 8 | வேளாண்மை துணை இயக்குநர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர், ஈரோடு மாவட்டம், ஈரோடு. |

| | |
|---|---|
| 9 | வேளாண்மை துணை இயக்குநர் (உரம்)<br>வேளாண்மை இயக்குநரகம், சென்னை-5 |
| 10 | திரு. வெங்கடாச்சலபதி,<br>வேளாண்மைத் துணை இயக்குநர், (PMKISAN)<br>வேளாண்மை இயக்குநரகம், சென்னை-5 |
| 11 | திரு. இப்ராம்ஷா,<br>வேளாண்மை உதவி இயக்குநர்<br>ஸ்டாமின் , குடுமியான்மலை, புதுக்கோட்டை மாவட்டம். |

திட்டம் செயல்படுத்தப்படும் காலம் மே-2022 முதல் செப்டம்பர் -2022 வரை

➢ திட்டப்பயன்கள்

1. மண் வளமே விவசாயிகளின் உயிர் நாடியாக விளங்குகிறது. விவசாயிகள் புலஎண் வாரியாக தங்கள் நிலங்களின் மண் வளத்தை அறிந்து கொள்ள இயலும்.
2. இத்திட்டச் செயலாக்கத்தின் மூலம் விவசாயிகள் எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் மண் வளம் தொடர்பான விவரங்களை அறிந்து கொள்ள இயலும்.
3. விவசாயிகள் தங்கள் நிலத்தின் மண்வளப் பரிந்துரை அட்டையினையும், தாங்களே அச்சிட்டுக்கொள்ள இயலும்.
4. மண்வகை, பிரச்சனைக்குரிய நிலங்களைக் கண்டறிந்து சீர்திருத்துவதற்கான வழிமுறைகளை அறிந்து செயல்படுத்திட இயலும்.
5. மண்வளத்திற்கேற்ப வேளாண் பயிர்வகைகள், தோட்டக்கலைப் பயிர்கள் மற்றும் மரவகைகளை அறிந்துகொண்டு அதற்கேற்ப சாகுபடி மேற்கொள்ள இயலும்.
6. சரியான பயிர்வகையைத் தேர்ந்தெடுத்து சாகுபடி செய்வதன் மூலம், மும்மடங்கு உற்பத்தியைப் பெருக்கி, வருவாயை இரட்டிப்பாக் இயலும்.
7. வருவாய் பெருகுவதன் மூலம் விவசாயிகள் பொருளாதாரத்தில் மேம்பட்டு, தன்னிறைவு அடைந்திட இயலும்.
8. ‘தமிழ் மண்வளம்’ இணையமுகப்பு தொடர்பான பணிகளைக் கையாள்வதற்காக பணியாளர் தொடர்பான செலவினத்தை தேசிய

மின் ஆளுமைத் திட்டத்தின் கீழ் வழங்கிட கோரி ஒன்றிய அரசுக்கும் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளதால், ஒன்றிய அரசின் ஒப்புதலை விரைவில் பெற்று, அதற்கேற்ப 'தமிழ் மண்வளம்' இணைய தளத்தின் சேவையினை மேலும் மேம்படுத்த வழிவகை செய்யப்படும்.

**சி. சமயமூர்த்தி**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசுச் செயலாளர்**

**//உண்மை நகல்//**

பிரிவு அலுவலர்